# தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை.

***முன்னாள் மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள்***

பாசத்திற்குரிய முன்னாள் மாணவர்களே,

வணக்கம்.

எழுபத்து இரண்டு ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றிச் சாதனைகள் பல படைத்துவரும் தேவகோட்டை தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளியின் முன்னாள் மாணவர்கள், நண்பர்கள் மற்றும் நலவிரும்பிகள் ஆகியோரை நம் பள்ளிக் குழுமத்தின் சார்பாக இம்மடல் மூலம் நாடுகிறோம். 1943-ஆம் ஆண்டு 228 மாணவர்களை மட்டுமே வைத்து நம் பள்ளி தொடங்கப்பட்டது. 1944-ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் 1948-ஆம் ஆண்டு S.S.L.C. பொதுத் தேர்விற்கு 25 மாணவர்களை முதன்முறையாக அனுப்பியது. 1978-ஆம் ஆண்டு அருட்தந்தை T.M. மத்தாய்,. அவர்களின் மேன்மையான தலைமையின் கீழ் மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. மிகச் சிறந்த கல்வியாளர்களான அருட்தந்தை ஆல்பர்ட் மச்சாடோ, அருட்தந்தை தங்கதுரை, அருட்தந்தை K.S. அருளானந்தம் மற்றும் பலர் தங்களின் தன்னிகரற்ற சேவையின் மூலம் நமது பள்ளியை மாநில அளவில் தரம் உயர்த்தியுள்ளார்கள்.

**பள்ளி இலட்சியப் பாதையில்...**

நம் பள்ளி தேசிய அளவில் சிறந்த ஒழுக்கச் சீலர்களையும், அறிவுசார் சான்றோர்களையும், திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களையும், அரசியல், நிர்வாகம், மருத்துவம், சட்டம், தகவல் தொழில்நுட்பம், தனியார் நிறுவனங்கள், அரசுத்துறைகள் ஆகியவற்றில் தடம்பதித்து வரலாறு படைத்து வருகிறது. பல்வேறு தொலைக்காட்சிகளின் பேச்சரங்க, கவியரங்க நிகழ்வுகளில் நம் மாணவர்கள் பங்கேற்று வெகுச்சிறப்பான பாராட்டையும், மாநில அளவில் விருதுகளையும் குவித்து வருகின்றனர்.

**எழில்மிகு பிரித்தோ இல்லத்தில் ....**

இன்று ஏறக்குறைய 1050 மாணவர்கள் கல்வி, விளையாட்டு மற்றும் கலைத் திறமைகளைப் பெற்றுப் பள்ளியின் ஒருங்கிணைந்த பிரித்தோ விடுதியில் தங்கிப் படித்து வருகிறார்கள். இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ள பிரித்தோ விடுதியின் ஒரு பகுதி 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும், மற்றொரு பகுதி 9 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ப நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுச் சிறந்த இல்லமாகச் செயல்பட்டு வருகிறது.

**ஆங்கில வழிக்கல்வியில் ....**

நமது முன்னாள் மாணவர்களும், பெற்றோர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் காரணமாகவும், கல்வியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் 2008-ஆம் ஆண்டு ஆங்கில வழிக்கல்வி (English Medium) நம் பள்ளியில் தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டு ஆங்கில வழியில் படித்த 10-ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுப் பெரும்பான்மையானோர் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றனர். நம் பள்ளியின் ஆங்கிலவழிப் பிரிவில் இருபால் ஆசிரியர்கள் நவீன முறையில் பாடங்களைக் கற்றுக்கொடுத்து வரலாறு படைக்கிறார்கள்.

**புதிய நவீன முயற்சிகளில் ...**

ஆங்கிலம் காலத்தின் கட்டாயம் என்பதை முன்னாள் மாணவர்கள் வலியுறுத்தியதால், தமிழ் வழியில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களும் ஆங்கிலத்தில் புலமை பெற வேண்டும் என்ற நோக்கில் ELT (English Language Teaching) என்னும் புதிய முறையை அறிமுகப்படுத்திப் பின்பற்றி வருகிறோம். மேலும் ஆங்கில மொழி வள மையம் (LRC-Language Resource Centre), SMART Class, இந்திய ஆட்சிப் பணிகளுக்கு (IAS,IPS,IFS) ஏழை மாணவர்களைத் தயார் செய்யும் GSP (Government Service Project) போன்ற புதிய அமைப்புகள் மூலம் ஏழை மாணவர்கள் பல்வேறு திறமைகளை வளர்த்துக் கொள்ள நம் பள்ளி பல முயற்சிகளை எடுத்துவருகிறது.

**பள்ளியின் பணிவான வேண்டுகோள் ...**

நம் பள்ளியின் முதலாவது ஓட்டுக் கட்டிடம் 1943-ல் கட்டப்பட்டது. சுண்ணாம்புக் கலவைகொண்டும் மரத்தூண்கள் கொண்டும் கட்டப்பட்டது. 1943-லிருந்து இந்நாள்வரை இலட்சக்கணக்கான மாணவர்கள் பாதுகாப்பாகக் கல்வி கற்க உதவிய புனிதமான கட்டிடம். 18 வகுப்பறைகளைக் கொண்ட இந்தப் பிரமாண்டமான கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருந்தது. இதுபற்றித் திறமை வாய்ந்த பொறியாளர்களின் ஆலோசனைகளைக் கேட்டபோது மாணவர்களின் நலன் கருதி அந்தக் கட்டிடத்தை இடித்துவிட்டு மீண்டும் புதிதாகக் கட்டியெழுப்புவது பாதுகாப்பானது எனத் தெளிவுபடுத்தினர். இதே கருத்தை நமது முன்னாள் மாணவர் மன்றத்தின் செயற்குழுவும் வலியுறுத்தியது. எனவே, தற்போது பழையக் கட்டிடம் முழுமையாக இடிக்கப்பட்டுத் தரைமட்டமாக இருக்கிறது. நமது வகுப்பறைகள் மீண்டும் புதிய பொழிவுடன் நிமிர்ந்து நிற்க உங்களைப் போன்ற முன்னாள் மாணவர்களின் உதவிக்கரம் வேண்டி நிற்கிறோம்.

இடிக்கப்பட்ட 16 வகுப்பறைகள் மற்றும் இரண்டு அலுவலக அறைகளை மீண்டும் கட்டியெழுப்ப இயேசு சபை மாநிலத் தலைவர் அவர்களின் உதவியை நாடியுள்ளோம். மேலும் நமது முன்னாள் மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் பள்ளியின்மீது பற்றுகொண்டு, பள்ளிக்குத் தாராளமாக உதவுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்களை வேண்டுகிறோம். கட்டிடத்தின் மொத்தப் பரப்பளவு 17458 sq.ft. ஒரு வகுப்பறையின் அளவு 24’0”x23’0”. மொத்தக் கட்டுமானச்செலவு 1,85,00,000 ( ஒரு கோடியே எண்பத்து ஐந்து லட்சம்) ஆகும் எனப் பொறியாளர்கள் திட்டமதிப்பீடு செய்துள்ளார்கள். ஏறக்குறைய ஐந்து பொறியாளர்களின் திட்டமதிப்பீட்டைப் பெற்று இறுதியாகத் திருச்சி Matha constructions என்ற கட்டுமானக் குழுவிடம் 18500000 (ஒரு கோடியே எண்பத்து ஐந்து லட்சத்திற்கு) ஒப்பந்தம் செய்துள்ளோம். எனவே தனிப்பட்ட பெயரில் ஒரு வகுப்பறையோ அல்லது குடும்பத்தின் பெயரில் வகுப்பறைகளைக் கட்டித்தருகின்ற தங்களின் பெயரில் கல்வெட்டு வைத்து மகிழ விரும்புகிறோம். எனவே முன்னாள் மாணவர்களும், நல்லெண்ணம் கொண்டவர்களும் தாங்கள் படித்து வளர்ந்த பள்ளிக்குத் தாராளமாக உதவிடப் பணிவுடன் வேண்டுகிறோம்.

**நன்றியுடன்,**

**தங்களின் தாராள உள்ளத்தை எதிர்நோக்கும்,**


அருட்திரு.அதிபர்
தே பிரித்தோ மேனிலைப்பள்ளி
9842317769
Email: sup.debritto@mdusj.org

V. Augustin sj
அருட்திரு.தலைமையாசிரியர்
தே பிரித்தோ மேனிலைப் பள்ளி
9843971943
Email: debrittohssdvk@gmail.com


குறிப்பு: 1) தாங்கள் தரக்கூடிய தொகைக்கு 80G வரிவிலக்கு உண்டு. (படிவம் டிபிரிட்டோ வலைப்பக்கத்தில்)

2) தாங்கள் உதவித்தொகை அனுப்பவேண்டிய முகவரி:

| | | |
|---|---|---|
| Name of the A/c | : | The Society of De Britto |
| A/c No. | : | 247801000002288 |
| Name of the Bank | : | Indian Overseas Bank |
| Branch | : | Kandadevi |
| IFS Code | : | IOBA0002478 |

3) வெளிநாட்டிலிருந்து FC மூலம் பணம் அனுப்ப விரும்புவோர் அருட்தந்தையர்களின் email முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.